**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:- திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2023-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29ஆம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.*212*/2022**
*(*TNTL190004732022*)*

குருசாமி . . . **வாதி**

/எதிர்/

பூச்சம்மாள் . . . **பிரதிவாதி**

இந்த அசல் வழக்கானது கடந்த *17.03.2023*ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. மாரியப்பன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி, நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பாராக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதுரையைக் கேட்டறிந்தும், வாதி தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இதுவரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீ ர் ப் பு ரை**

பிராது தபசில் கண்ட சொத்தான வீடு, வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென பிரதிவாதிக்கெதிராக விளம்புகை செய்தும், அதை அனுசரித்து பிரதிவாதியை தபசில் வீட்டிலிருந்து வெளியேற்றி, தபசில் சொத்தின் சுவாதீனத்தினை வாதி வசம் ஒப்படைக்கவும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகையும் கிடைக்கும்படிக்கும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

2. <u>வழக்குரையின் சுருக்கம்</u>:

தபசில் கண்ட மொத்த சொத்துக்களின் விஸ்தீரணம் 000.65 என்றும், அது கலிங்கப்பட்டி கிராமத்தில் ஆதியில் நத்தம் புறம்போக்காக இருந்து வந்தது என்றும், பிராது தபசில் சொத்துக்களை இந்த வாதியும், வாதியின் உடன்பிறந்த சகோதரர் பொன்னுத்தேவரும் அனுபவித்து வந்து, பட்டா பெற்று, தீர்வை முதலியன செலுத்தி சர்வசுதந்திர பாத்தியமாய் ஆண்டனுபவித்து வந்தனர் என்றும், அதன்பின் ஷை சகோதரர்கள் இருவரும் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வாய்மொழியாக பிரிவினை செய்துகொண்டதில், பிராது மொத்த சொத்தில் வடபாதி வாதிக்கும், தென்பாதி பொன்னுத்தேவருக்கும் ஒதுக்கப்பட்டு, அதில் அவரவர்கள் பாகச் சொத்தில் தனித்தனியாக வீடு கட்டி அனுபவித்து வந்தனர் என்றும், இந்நிர் பிரதிவாதி, வாதியுடன் பிறந்த சகோதரி என்றும், பிரதிவாதிக்கு, வாதியே சீர்சீராட்டுக்கள் செய்து திருமணம் செய்து கொடுத்தும், பிரதிவாதி அவரது கணவருடன் வாழாமல், பிறந்த ஊரான கலிங்கப்பட்டி கிராமத்திற்கு வந்துவிட்டார் என்றும், இந்நிலையில் கலிங்கப்பட்டி கிராமத்தில் மேலத்தெருவில் வாதிக்கு வேறொரு வீடு உள்ளது என்றும், வாதிக்கு குடும்பம் பெரிதான நிலையில், தபசில் வீடு காணாத நிலையில், வாதி, தபசில் வீட்டை காலி செய்து, மேலத்தெருவில் உள்ள வீட்டிற்கு குடிபெயர்ந்தார் என்றும், இந்நிலையில், பிரதிவாதி, தனது நிலை குறித்து, வாதியிடம் அழுது புலம்பியதால், தபசில் வீட்டில் குடியிருக்க வாதி அனுமதியளித்து, தபசில் வீட்டில் பிரதிவாதி குடியிருந்து வந்தார் என்றும், இந்நிலையில், கடந்த 2 வருடங்களுக்கு முன்பு பிரதிவாதியின் செயல்களில் மாற்றம் ஏற்பட்டு, ஏதோ தபசில் வீடு அவருக்கு பாத்தியப்பட்டதுபோல் தப்புப் பாத்தியதை கொண்டாடிக்கொண்டு, வாதியின் உரிமையை மறுத்து வந்ததோடு மட்டுமல்லாமல், தபசில் வீட்டை வில்லங்கம் செய்ய கடந்த 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தீவிரமாக எத்தணித்து வருகிறார் என்றும், எனவே, பிராது தபசில் கண்ட சொத்தான வீடு, வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென பிரதிவாதிக்கெதிராக விளம்புகை செய்தும், அதை அனுசரித்து பிரதிவாதியை தபசில் வீட்டிலிருந்து வெளியேற்றி, தபசில்

சொத்தின் சுவாதீனத்தினை வாதி வசம் ஒப்படைக்கவேண்டுமென்றும் வாதி தரப்பில் வழக்குரைக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் இந்நீதிமன்றத்திலிருந்து பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும், ஷை அழைப்பாணைகளை பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்துள்ளார். பிரதிவாதி, நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பாராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. இந்த வழக்கில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

என்பதேயாகும்.

5. இவ்வழக்கில், வாதி தரப்பில், வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் யாதொரு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. **<u>தீர்வு</u>:**

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் வாதி மற்றும் அவரது சகோதரர் பொன்னுத்தேவருக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க, வாதி தன் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளார். மேலும், வா.சா.ஆ.1 ஆவணத்தினை ஆராய்கையில், அது, தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணமான சர்வே எண்.2534/4-க்கான நத்தம் நிலவரித் திட்ட சிட்டா ஆகும். மேலும், வா.சா.ஆ.1ல், தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்திற்கு வாதி மற்றும் அவரது சகோதரர் பெயரில் கூட்டாக பட்டா ஏற்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.1க்கு முரணாக, பிரதிவாதி தரப்பில் யாதொரு கட்சியும் செய்யாமல் தோன்றா

தரப்பினராகியுள்ளார். எனவே, தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் வாதி மற்றும் அவரது சகோதரர் பொன்னுத்தேவருக்கு கூட்டாக பாத்தியப்பட்டதை வாதி நிருபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. வாதி மற்றும் அவரது சகோதரருக்கு இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில், தாவா சொத்து வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு, அவர் பெயரில் தீர்வை ஏற்பட்டுள்ளதை நிருபிக்க, வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.4 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.4 ஆவணத்தினை ஆராய்கையில், அது, கதவு எண்.3/56-க்கான, வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது ஆகும். மேலும், வா.சா.1 தனது சாட்சியத்தில், வாய்மொழி பாகப்பிரிவினையில், தாவா சொத்து வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு, அதன்படி வா.சா.ஆ.4 தீர்வை, தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வாதி குறிப்பிடுவது போல், வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றோ அல்லது வா.சா.ஆ.4 தாவா சொத்திற்கானது கிடையாது என்றோ பிரதிவாதி தரப்பில் யாதொரு கட்சியும் செய்யாமல் தோன்றா தரப்பினராகியுள்ளார். எனவே, வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்து, வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு, அதன்படி வாதி பெயரில் வீட்டு வரி ஏற்பட்டுள்ளதை வாதி நிருபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. வாதியின் சகோதரியான பிரதிவாதி, கணவர் இல்லாமல் இருந்ததால், தாவா சொத்தில் குடியிருக்க வாதி அனுமதி அளித்த நிலையில், தாவா சொத்திற்கு பிரதிவாதி உரிமை கோரியதால் அந்த அனுமதியை வாதி ரத்து செய்ததை நிருபிக்க, வாதி தன் தரப்பில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேலும், வா.சா.ஆ.2 ஆவணத்தினை ஆராய்கையில், அது, 24.05.2002 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு ஆகும். மேலும், வா.சா.ஆ.3 ஆவணத்தினை ஆராய்கையில், வா.சா.ஆ.2 அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொள்ள

மறுத்து திருப்பப்பட்ட அஞ்சல் உறை ஆகும். எனவே, வா.சா.ஆ.3 அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்துள்ளதால், அது பிரதிவாதிக்கு முறையாக சார்வு செய்யப்பட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், வா.சா.ஆ.2 அறிவிப்பில், பிரதிவாதிக்கு அளித்திருந்த அனுமதியை வாதி ரத்து செய்துவிட்டதாகவும், தாவா சொத்தின் சுவாதீனத்தினை வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு பிரதிவாதி தரப்பில் யாதொரு பதில் அறிவிப்பும் அளிக்கவில்லை. மேலும், வாதி கூறுவதுபோல், வாதியின் அனுமதியின்பேரில் பிரதிவாதி குடியிருக்கவில்லை என்றோ அல்லது அதற்கு முரணாக, தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு உரிமை எதுவும் உள்ளதாகவோ யாதொரு கட்சியும் செய்யாமல், பிரதிவாதி இந்நீதிமன்றத்தின் முன்பு தோன்றா தரப்பினராகியுள்ளார். எனவே, தாவா சொத்தில் வாதியின் அனுமதியின் பேரில் பிரதிவாதி குடியிருந்தார் என்றும், பின்னர் அந்த அனுமதியை வாதி வா.சா.ஆ.2ன் மூலம் ரத்து செய்துவிட்டதை வாதி நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. எனவே, தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு, வாதி பெயரில் தீர்வை ஏற்பட்டு, வாதியின் அனுமதியின் பேரில் பிரதிவாதி குடியிருந்த நிலையில், அந்த அனுமதியை வாதி ரத்து செய்ததை வாதி நிரூபணம் செய்துள்ள நிலையிலும், அதற்கு முரணாக, பிரதிவாதி யாதொரு கட்சியும் செய்யாமல் தோன்றா தரப்பினர் ஆகியுள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைகக்கூடியது என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

10. இறுதியாக, தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் பிரதிவாதி தாவா சொத்தில் இருந்து காலி செய்து தாவா சொத்தின் சுவாதீனத்தினை வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஒரு தலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை

கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையினை அவரவரே ஏற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2023ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29ஆம் நாள்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2023.03.29 18:02:29 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 திரு. குருசாமி (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | நத்தம் நிலவரித் திட்ட தூய சிட்டா |
| வா.சா.ஆ.2 | 24.05.2022 | வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சலக ரசீதுடன் உள்ளது |
| வா.சா.ஆ.3 | - | சார்வாகாமல் திரும்ப வந்த அஞ்சல் உறை |
| வா.சா.ஆ.4 | 23.08.2022 | வீட்டு வரி ரசீது |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:** இல்லை

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2023.03.29 18:02:39 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**அசல் வழக்கு எண்.212/2022**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள்: 29.03.2023**